பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 07 சனிக்கிழமை 19.02.2022 கதிர் 332


## அரசியலில் இருந்து உடன் ஓய்வுபெறுக!

### மஹிந்தவுக்கு சம்பிக்க ஆலோசனை

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் இருந்து உடன் ஓய்வுபெற வேண்டும் என்று சம்பிக்க ரணவக்க வலியுறுத்தினார்.

இது தொடர்பில் சிங்களத் தொலைக்காட்சி ஒன்றிடம் அவர் மேலும் கூறுகையில்,

குடும்பத்துக்கு முக்கியத்துவம் ☞2

## பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளார் ஸ்டாலின்!



### கூட்டமைப்பு, உலகத் தமிழர் பேரவை கூட்டறிக்கை

தமிழ் நாட்டின் முதலமைச்சராகி இன்னும் ஒருவருடம் கூட கழியாத நிலையில், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சந்தேகத்துக்கிடமின்றி தமது ஆளுமையைத் தமிழகத்திலும், உலகத் தமிழர் மத்தியிலும் வெளிக்காட்டியுள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகிய இரு அமைப்புக்களும் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளன.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கொரோனாவைரஸ்தொற்றுநோயின் இரண்டாம் அலையைக் ☞2

### தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு;

# இலங்கைக்கு வரும் மோடி அரசை அழுத்த வேண்டும்!



### இந்தியத் தூதுவரிடம் சம்பந்தன் நேரில் வலியுறுத்து

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த மாதம் இலங்கைக்கான தமது விஜயத்தின்போது தமிழ் மக்களுக்கான நியாயமான தீர்வு தொடர்பில் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.**

**- இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவிடம் நேரில் வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.** ☞2

## அம்பாறையில் நாளை கையெழுத்து வேட்டை

(காரைதீவு நிருபர் சகா)



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் இடம்பெறும் கையெழுத்துப் போராட்டத்தின் ஓரங்கமாக நாளை ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மாவட்டத்தில் கையெழுத்து வேட்டை ☞2

## கொழும்பு மேயர் தலைமையிலான உறுப்பினர்கள் யாழுக்கு விஜயம்!



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

கொழும்பு மாநகர மேயர் ரோஸி சேனநாயக்க மற்றும் கொழும்பு மாநகர சபை உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் பொது சன நூலகத்தை இன்று நேரில் பார்வையிட்டு ஒரு ☞2

## தொடரும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்; நேற்றும் 6 பேர் கைது





(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 6 இந்திய மீனவர்கள் ஒரு படகுடன் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

காரைநகர் - கோவளம் கடற்பரப்பில் நேற்றிரவு இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் ஒரு படகையும் அதில் இருந்த 6 இந்திய மீனவர்களையும் கைதுசெய்தனர். ☞2

## பொலிஸ் கான்ஸ்டபிள் படுகொலை; பெண்ணொருவர் உட்பட 4 பேர் கைது

தங்காலை பொலிஸ் கான்ஸ்டபிள் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் நால்வரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சந்தேக நபர்களில் ஒரு பெண்ணும் அடங்குகின்றார் ☞2


வெற்றித்தேர்வு வெளியீட்டகம் நடாத்தும்

புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும்

2022 - தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான

கடினமான வினாக்களை உள்ளடக்கி வெளிவரும் முதற்தர மாதிரி வினாப்பத்திரம்

வெற்றித்தேர்வு தொடர் போட்டிப் பரீட்சைகளும், வினாத்தாள்களை தெளிவுபடுத்தும் வினாவிடை வகுப்புகளும் ஆரம்பம்

பரீட்சை நாள் – ஞாயிற்றுக்கிழமை

பரீட்சை நிலையம் – நல்லூர் சயன்ஸ் அக்கடமி (முருகன் ஆலயம் முன்பாக)

பரீட்சை நேரங்கள் – காலை 6.00 - 8.15, காலை 8.30 - 10.45, காலை 11.00 - 1.15, மதியம் 1.30 - 3.45, மாலை 4.00 - 6.15

விரும்பிய நேரங்களில் பரீட்சைகள் எழுதலாம்

தரம் 3, தரம் 4, தரம் 5 முதலாவது பரீட்சை 20.02.2022

அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க வெற்றித்தேர்வு பரீட்சை எழுதும் மாணவர்களின் மதிப்பீடு செய்யப்பட்ட வினாத்தாள்களை வெற்றித்தேர்வு வளவாளர்களால் தெளிவுபடுத்தப்படும்

விசேட வினாவிடை வகுப்புகள்

வினாவிடை வகுப்பு – சனிக்கிழமை

தரம் - 3 காலை 10.00 - 12.00, தரம் - 4 மதியம் 12.30 - 2.30, தரம் - 5 மாலை 3.00 - 5.30

முதலாவது வினாவிடை வகுப்பு 26.02.2022

பரீட்சைப் பெறுபேறுகள் தரப்படுத்தலுடன் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்படும்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் வெற்றித்தேர்வு வெற்றியாளர்களாக கௌரவிக்கப்படுவர்.

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

"வெற்றித்தேர்வு வெற்றியாளர்களின் தெரிவு" 0775388471 0773126807





## இலங்கைக்கு வரும் மோடி ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, தமிழர்கள் இங்கு எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இந்தியப் பிரதமரிடம் பல விடயங்களை நேரில் பேசத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆவலாக உள்ளது எனவும் சம்பந்தன் குறிப்பிட்டார்.

நேற்று மாலை 3.30 மணியளவில் கொழும்பிலுள்ள இந்தியன் இல்லத்தில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, துணைத் தூதுவர் வினோத் ஜேக்கப், அரசியல்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பானு பிரகாஷ் ஆகியோரோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் பேச்சு நடத்தினர். இதன்போதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி சந்திப்பு தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தச் சந்திப்பில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி ஜெய்ஷங்கர் மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் அடுத்த மாதம் இலங்கைக்கு வருவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றிப் பேசப்பட்டன. அத்தோடு வடக்கு, கிழக்கின் பொருளாதார அபிவிருத்தியில் இந்தியாவின் பங்களிப்பு பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் போதும் அதற்குப் பின்னரும் இலங்கையின் தமிழ்த் தேசிய பிரச்சினை தீர்வு சம்பந்தமாக தொடர்ந்து வந்த இலங்கை அரசுகள் இந்தியாவுக்குக் கொடுத்த வாக்குறுதிகளில் 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு முறையை உருவாக்குவதாக இருந்தது. இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றப்பண்ணுவதில் இந்தியா தொடர்ச்சியாக எடுக்கும் முயற்சிகளுக்கு நன்றி தெரிவிக்கின்ற அதே வேளையிலே தொடர்ந்தும் இந்தியா அந்தப் பங்களிப்பைச் செய்து இலங்கையில் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் சம்பந்தன் முன்வைத்தார்.

ஏறத்தாழ ஒன்றரை மணி நேரம் நடந்த இந்தக் கூட்டத்தில் வேறும் பல விடயங்கள் தீர்க்கமாக ஆராயப்பட்டன - என்றார்.

## அரசியலில் இருந்து .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்காமல் மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் இருந்து உடனடியாக ஒதுங்க வேண்டும். அத்துடன், ரணில் விக்கிரமசிங்கவும் 25 ஆண்டுகள் தலைவர் பதவியை வகித்துவிட்டார். அவரும் விடைபெற வேண்டும்.

இவ்விருவரும் நாட்டுக்குச் சேவையாற்றியுள்ளனர். அதேபோல் குறைபாடுகளும் உள்ளன. அதேபோல் இருவருக்கும் இடையில் மாறுபட்ட திறமைகள் உள்ளன. - என்றார்.

## அம்பாறையில் நாளை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறவுள்ளது.

நாளை காலை 9 மணியளவில் காரைதீவு பொதுச்சந்தைக்கு முன்னால் கையெழுத்து வேட்டை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளரும் காரைதீவு பிரதேச சபைத் தவிசாளருமான கி.ஜெயசிறில் தலைமையில் ஆரம்பமாகின்றது. நண்பகல் 12 மணியளவில் கல்முனை பிரதான பஸ்நிலையத்துக்கு அருகாமையில் இது நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி இதற்கான ஏற்பாட்டை செய்துள்ளது.

உங்கள் ஒவ்வொருவரினதும் கையொப்பங்களும் உங்கள் பாதுகாப்புக்கானதும், உங்கள் சந்ததியின் பாதுகாப்புக்கானது ஆகும். எனவே, இந்தக் கையெழுத்துப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கின்றோம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளரும் காரைதீவு பிரதேச சபைத் தவிசாளருமான கி.ஜெயசிறில் தெரிவித்தார்.

## கொழும்பு மேயர் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொகுதி புத்தகங்களையும் நூலகத்துக்குக் கையளித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்துக்கு வருகை தந்த கொழும்பு மாநகர மேயர் அடங்கிய குழுவினரை யாழ்ப்பாணம் மாநகர பிரதி மேயர் துரைசாசாஈசன், மாநகர சபை ஆணையாளர் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் வரவேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தொடரும் இந்திய .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்டவர்களையும் படகையும் கடற்படையினர் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்துக்குக் கொண்டு சென்றனர்.

## பொலிஸ் கான்ஸ்டபிள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 17ஆம் திகதி இரவு தங்காலை விதாரந்தெனிய பிரதேசத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள், அவரது மனைவி மற்றும் அவரது இளைய சகோதரர் ஆகியோர் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்று பதிவாகியிருந்தது.

தாக்குதலில் கான்ஸ்டபிள் உயிரிழந்துள்ளமையுடன் அவரது இளைய சகோதரர் பலத்த காயங்களுடன் கராப்பிட்டிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் மற்றும் 15 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தங்காலை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் தெற்கு அதிவேக வீதியில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிளான சதுரங்க தில்ஷான் (வயது 36) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவர் தங்கியிருந்த வீட்டுக்கு அருகில் சிலருடன் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

## பெரும் நம்பிக்கையை .....-

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்படுத்தும் பணியானாலும், சாதி மற்றும் பாலியல் பாகுபாடுகளைத் தகர்த்து மக்களின் வாழ்க்கைத் தரத்தினைப் பொருளாதார ரீதியில் மேம்படுத்தும் நோக்கத்தினைக் கொண்ட சமூக நீதி வேலைத்திட்டமாகிலும் சரி அல்லது 2030 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டின் பொருளாதாரத்தை ஒரு ட்ரில்லியன் ஆக மாற்றும் ஆணித்தரமான இலட்சியத்தினைச் செயற்படுத்துவதிலும் முதல்வர் ஸ்டாலின் இந்தியாவின் ஏனைய தலைவர்கள் பார்த்துப் பொறாமை கொள்ளும் ஒரு தலைவராக மிளிருகிறார்.

அண்மைக்காலத் தமிழ்த் தலைமைகளை விஞ்சி, தமிழால் இணைவோம் என்ற தொனிப்பொருளில் முதல்வர் ஸ்டாலின் உலகத் தமிழர்களிடையேயான பொதுமையையும், ஒருமையையும் மேம்படுத்துவதில் பல்வேறு அர்த்தமுள்ள பணிகளை முன்னெடுத்திருக்கின்றார்.

குடியுரிமை இல்லாத தமிழர்களின் நலன் மற்றும் புனர்வாழ்வு போன்ற விடயங்களை முன்னிலைப்படுத்திய ஒரு அமைச்சுப் பதவிக்கு கே. எஸ். மஸ்தான் போன்ற அர்ப்பணிப்பு மிக்க ஒருவரை நியமித்தமை, ஜனவரி 12ஆம் திகதியை உலகப் புலம்பெயர் தமிழர் தினமாக அறிவித்து அதனை முதலமைச்சர் ஸ்டாலினே அங்குரார்ப்பணம் செய்து வைத்தமை, சர்வதேச பல்கலைக்கழகங்களில் தமிழ்க் கல்வியை ஊக்குவிப்பதற்காக எடுத்த முயற்சிகளில் ஹார்வர்ட் பல்கலைக்கழகம் மற்றும் டொரோண்டோ பல்கலைக்கழகம் போன்றவற்றில் தமிழ் இருக்கைகளை அமைப்பதற்கு வழங்கிய நன்கொடை போன்றவை இவரின் சீரிய பணிகளுக்கான சில உதாரணங்கள்.

இலங்கையின் வடக்கு, கிழக்கிலுள்ள மக்களைக் காத்திரமாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், உலகின் பல்வேறு நாடுகளிலும் இலங்கைத் தமிழர் நலன்களைப் பல்வேறு செயற்பாடுகள் மூலம் முன்னெடுத்து வரும் உலகத் தமிழர் பேரவையுமான நாங்கள் உலகத் தமிழ் மக்களுக்கு முதல்வர் ஸ்டாலின் வழங்கும் செழுமையான தலைமைத்துவம் நிமிர்த்தம் அவரில் உயர்ந்த மதிப்பு வைத்துள்ளோம்.

இலங்கையில் வாழும் தமிழர்களினதும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களினதும் கண்ணோட்டத்தில் தற்போதைய தமிழ் நாட்டு அரசின் அணுகுமுறையானது போற்றுதற்குரியது. கடந்த மாதம் இடம்பெற்ற முதன் முதலான உலகப் புலம்பெயர் தமிழர் தினத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனும், கனேடியத் தமிழர் பேரவைத் தலைவர் சிவன் இளங்கோவும் பங்குகொள்ள அழைக்கப்பட்டமைக்கு நாம் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம். மேலும் ஜனவரி 29ஆம் திகதி கனேடியத் தமிழர் பேரவையினால் நடத்தப்பட்ட தைப்பொங்கல் திருவிழாவில் தமிழ் நாடு அமைச்சர் கே. எஸ். மஸ்தான் கலந்துகொண்டு சிறப்பித்ததும் மகிழ்ச்சிக்குரியது.

கடந்த ஒகஸ்ட் மாதம் இலங்கைத் தமிழர் அகதி முகாம்கள் குறித்து முதலமைச்சர் ஸ்டாலின் கூறிய பின்வரும் கருத்துக்கள் வரவேற்கத்தக்கவையும் முக்கியத்துவம் வாய்ந்தவையுமாகும். அவர்கள் அநாதைகள் அல்ல, அவர்களுக்காக நாங்கள் இருக்கின்றோம். இனி மேல் அவை இலங்கைத் தமிழர் புனர்வாழ்வு முகாம்கள் என அழைக்கப்படும் - இந்த அறிக்கையானது அவரது வாழ்க்கைத் தரத்தினை மேலும் உயர்த்தும் முகமாக ஒதுக்கப்பட்ட 317 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் அறுதியாக உறுதி செய்யப்பட்டது.

இத்தருணத்தில் முதலமைச்சர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்க வேண்டும் என அழுத்தம் கொடுத்து விடுத்த அறிக்கைகளையும் நாம் நன்றியோடு நினைவு கூருகின்றோம்.

இலங்கைத் தமிழரின் போராட்டத்திற்கு முதல்வர் ஸ்டாலின் வழங்கும் ஆதரவான நிலைப்பாடானது விசேடமாக அவரது மகத்தான தந்தை அமரர் கலைஞர் மு.கருணாநிதி உட்படத் தமிழ் நாட்டின் திராவிடத் தலைவர்கள் எடுத்த ஆதரவான நிலைப்பாட்டின் நீட்சியாகத் துலங்குகின்றது. இலங்கையிலுள்ள தமிழ் மக்களும், தமிழ் அரசியல் தலைவர்களும் தமிழ் நாட்டுத் தலைவர்களை வழிகாட்டலுக்கும், உதவிக்கும், ஒரு உத்வேகத்தைப் பெற்றுக்கொள்வதற்குமாக நாடி வந்துள்ளார்கள். நேரடியாகவும் இந்திய அரசினூடாகவும் அவர்கள் வழங்கிய உதவிகள் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு ஒரு பெரிய ஆற்றுத் துணையாக இருந்துள்ளது.

1983ஆம் ஆண்டுக் கலவரத்துக்குப் பின்னர் தமிழ் மக்களின் உயிர்களையும், சொத்துக்களையும் மற்றும் அரசியல் உரிமைகளையும் பாதுகாப்பதற்கு மறைந்த கலைஞர் மு. கருணாநிதி வழங்கிய தலைமைத்துவத்தை நாம் என்றும் நன்றியோடு நினைவில் வைத்திருப்போம். முன்னாள் முதலமைச்சராக அவர் தன்னுடைய ஆளுமையைப் பன்படுத்தி இலங்கைத் தமிழ் மக்களின் வேணவாக்களான சமத்துவம், நீதி, சமாதானம், சுயமரியாதை மற்றும் அதிகாரப் பகிர்வு போன்ற விடயங்களை உள்ளடக்கிய ஓர் அரசியல் தீர்வை அடையும்படிக்கான முன்னெடுப்புகளைப் பல இந்தியப் பிரதமர்களோடு செய்துள்ளார். இலங்கைத் தமிழ் மக்களிற்காகத் தொடர்ச்சியாக நாடாளுமன்றத்திலே தி.மு.க. உறுப்பினர்கள் குரல் கொடுத்து வந்துள்ளார்கள். இலங்கைத் தமிழர் விவகாரத்தினைத் தொடர்புபடுத்தி 1991ஆம் ஆண்டு தி.மு.க. அரசு கலைக்கப்பட்டது உட்பட இந்திய ஒன்றியத்திற்குள்ளே பல்வேறு சவால்கள் இருந்த போதும் தி.மு.க. தொடர்ச்சியாக இலங்கைத் தமிழர் தொடர்பில் சாதகமான அணுகுமுறையைக் கையாண்டுள்ளமையை நாங்கள் மனங்கொள்கின்றோம்.

அண்மைக்காலமாகத் தமிழ்நாட்டுப் பிரதான திராவிட இயக்கங்களின் தலைவர்கள் எதிர்கொள்ளும் அசௌகரியமான மற்றும் தரக்குறைவான சம்பவங்கள் தொடர்பில் நாம் மிக உன்னிப்பாகவும் கரிசனையோடும் உள்ளோம். இத்தகைய வருத்தத்திற்குரிய சம்பவங்கள் பாக்குநீரிணையின் இருபுறமுமுள்ள தீவிரபோக்குடைய, யதார்த்தமற்ற கொள்கைகளைக் கைக்கொள்பவர்களினால் நிகழ்த்தப்படுபவையாகும். கடந்த காலங்களில் நடந்த ஒவ்வொரு சம்பவத்தினையும் நெறிப்படுத்துவதில் அவர்களிற்கிருந்த வரம்புகளைப் புரிந்தவர்களாகப் பெரும்பான்மையான இலங்கைத் தமிழ் மக்கள் தமிழ்நாட்டுத் தலைவர்கள் வழங்கிய உதவிகளிற்கு நன்றியுள்ளவர்களாகவே இருக்கின்றார்கள். அத்தகைய புரிந்துணர்வு வலுப்பெற்று வருகின்றது, இது இரு சமூகங்களினதும், தலைவர்களினதும் பிணைப்பையும் ஒருவருக்கொருவரான மரியாதையினையும் பலப்படுத்தும்.

இலங்கையின் தமிழர்கள் மீண்டும் ஒரு இக்கட்டான நிலையில் உள்ளனர். போர் முடிவடைந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களின் பொருளாதார வாய்ப்புகள் மோசமாக உள்ளன. போர் தொடர்பான பொறுப்புக்கூறலின் முன்னேற்றமும் மிகச் சிறிய அளவிலேயே உள்ளது. பிராந்தியக் குடிப்பரம்பலை மாற்றும் நோக்குடன் அரச அனுசரணையுடன் இடம்பெறுகின்ற நடவடிக்கைகள் மற்றும் பரவலாகக் காணப்படும் இராணுவமயமாக்கலின் மத்தியில் தமது நிலத்தினையும் அடையாளத்தினையும் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பாதுகாப்பது என தமிழர்கள் பெருமளவில் தமது இருப்பினைத் தக்கவைப்பதற்கான சவால்களுக்கு முகம்கொடுக்கின்றனர். வரையப்பட்டு வருவதாகச் சொல்லப்படும் புதிய அரசியல் யாப்பானது தமிழர்களின் நிலையினை இன்னமும் பலவீனப்படுத்தலாம் - குறிப்பாக நேரடி இந்தியத் தலையீட்டுடன் உருவாக்கப்பட்ட ஒரே அரசியல் யாப்புசார் அதிகாரப்பகிர்வு ஏற்பாடான மாகாண சபை முறைமையினை நீக்கவோ அல்லது பலவீனமடையச் செய்யவோ கூடுமென்ற அச்சம் காணப்படுகின்றது.

இத்தகையதொரு இக்கட்டான சூழ்நிலையிலேயே இந்தியா மற்றும் தமிழ் நாட்டின் நெறிகாட்டுதலையும் ஆதரவையும் நாம் எதிர்ப்பார்த்திருக்கின்றோம்.

இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் தங்களின் வரலாற்று அடிப்படையினாலான வாழ்விடப் பகுதிகளில் (வடக்கு மற்றும் கிழக்கு) ஒரு சுய ஆட்சியை விரும்புகின்றனர். மேலும், இந்த அதிகாரச் செழுமையானது இலங்கையில் தங்களின் சமமான குடியுரிமைக்கும், இத்தீவில் தங்களின் தனித்துவ அடையாளத்தைப் பாதுகாப்பதற்கும் அடிப்படையானது என்றும் நம்புகின்றார்கள் - இது தமிழக மற்றும் இந்தியக் கொள்கை நோக்குகளுடன் ஒத்திசைவான நிலைப்பாடே.

இந்தியா இலங்கையின் மீது கணிசமான செல்வாக்கைக் கொண்டுள்ளதோடு சமத்துவம், நீதி, சமாதானம், கண்ணியம் மற்றும் அர்த்தமுள்ள அரசியல் அதிகாரப் பகிர்வுக்கான தமிழ் மக்களின் நியாயமான வேணவாக்களை நிவர்த்தி செய்யுமாறு இலங்கைக்கு மீண்டும் மீண்டும் அழைப்பு விடுத்துள்ளது. 2021 மார்ச் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வுகளின் காலகட்டம் உள்ளடங்கலாகப் பல சந்தர்ப்பங்களில், இலங்கையின் ஒற்றுமை, பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் தமிழர்களின் வேணவாக்களை ஆதரிக்கும் அதன் இரு தூண் கொள்கைகள் போன்ற விடயங்களை இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இலங்கை தொடர்பான இந்தியக் கொள்கைகளை அமைப்பதில் தமிழ்நாடு எப்போதுமே முக்கியமானதொரு பங்கு வகித்து வந்துள்ளது. இந்தச் சூழலில் தமிழக முதலமைச்சர் ஸ்டாலினின் பாதை வகுப்பதான மூலோபாயமான அணுகுமுறை நமக்கு மகத்தான ஆறுதலைத் தருகின்றது.

இந்த இக்கட்டான நேரத்தில் இந்தப் பிரச்சினையில் தொடர்ந்து கவனம் செலுத்துவது இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் நீண்ட கால அமைதி மற்றும் சுபீட்சமான வாழ்வுக்கு முக்கியமானதாகும்.

(07பக்கம் பார்க்க)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இந்தியத் தரப்புடன் பேச்சு

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் – சுமந்திரன் இணை நேற்று மாலை இந்தியத் தூதுவர், பிரதித் தூதுவர் மற்றும் அரசியல் அதிகாரி ஆகியோருடன் கொழும்பில் இந்திய ஹவுஸில் நடத்திய கலந்துரையாடலில் முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டிருக்கின்றன என அறிய வருகின்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி, வெளிவிவகார அமைச்சர் ஜெயசங்கர் ஆகியோரின் உத்தேச இலங்கை வருகை ஏற்பாடுகள், வடக்கு – கிழக்கில் பொருளாதார ஊக்குவிப்புக்கு இந்தியா மூலமான முதலீடுகள் குறித்தெல்லாம் இந்தச் சந்திப்பில் விரிவாகப் பேசப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

அதற்கு அப்பால் தேசிய இனப்பிரச்சினை குறித்து சில தீர்க்கமான விடயங்களை இந்தச் சந்திப்பின் போது சம்பந்தன் குறிப்பிட்டிருக்கின்றார் என அறிய வருகின்றது.

‘அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் பற்றி இப்போது அதிகம் பேசப்படுகின்றது. அது தொடர்பில் தமிழர் தரப்பின் நிலைப்பாட்டை நாம் கடைசியாகக் கையளித்த கடிதத்திலும் தெளிவாக வெளிப்படுத்தி உள்ளோம்.

‘தீர்வு விடயத்தில் 13 ஆவது திருத்தத்துடன் நிற்க முடியாது. அப்படி 13தான் என்ற ஒரு நிலைப்பாடு எடுக்கப்பட்டால் அதனால் இந்தியாவுக்கும் கெட்ட பெயர். தமிழர் பிரதிநிதிகளான எங்களுக்கும் கெட்ட பெயரே வரும். ஆகவே 13 உடன் தீர்வு காண்பது என்ற கருத்தியல் இருந்தால் அதுவும் கைவிட்டு விடுங்கள்.

‘யுத்த காலத்திலும் யுத்தத்துக்குப் பின்னரும் இந்தியாவுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் இலங்கை அரசுகள் இது விடயத்தில் பல்வேறு உறுதிமொழிகளை வழங்கியுள்ளன. அவற்றைக் கைவிட முடியாது. அதுதான் எங்களின் உறுதியான நிலைப்பாடு.” – என்ற சாரப்பட திட்டவட்டமான, தீர்க்கமான முடிவு ஒன்றை சம்பந்தன் எடுத்துரைத்தார் என்று அறிய முடிந்தது.

கூட்டமைப்புத் தலைவரின் இந்தக் கருத்தை இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயும் முழு அளவில் ஏற்று அங்கீகரித்தார் எனவும் கூறப்பட்டது.

இலங்கை அரசு, காலத்துக்குக் காலம் கொடுத்த வாக்குறுதிகளை அது நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடு. அதை எப்படிச் செய்வது, எந்த வழியில் நிறைவேற்றுவது என்பதுதான் தீர்க்கப்பட வேண்டிய விவகாரம் – என்ற சாரப்பட இந்தியத் தூதுவர் பதிலளித்தார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழர்களைப் பொறுத்தவரை தேசிய இனப்பிரச்சினைக்கு அவர்கள் எதிர்பார்க்கும் தீர்வு தெளிவானது. அது நீதி, நியாயமான – ஏற்றுக்கொள்ளக் கூடிய –அபிலாஷைகளின் அடிப்படையில் அமைந்தது.

13 ஆவது திருத்தத்தைப் பொறுத்தவரை அதன் மூலமும் சில அதிகாரங்கள் பகிரப்படுகின்றன என்பது உண்மைதான். ஆனால் அதன் மூலம் அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்ட பல அதிகாரப் பகிர்வுகள் – முக்கிய விடயங்கள் – 34 ஆண்டுகள் கடந்தும் நடைமுறைப் படுத்தப்படவேயில்லை. பகிரப்பட்ட பல அதிகாரங்கள் மீளப் பறிக்கப்பட்டும் விட்டன.

ஆகவே, இனி வரக்கூடிய தீர்வு எதுவும் அதன் மூலம் பகிரப்படும் அதிகாரம் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதோடு அது மீளப் பறிக்க முடியாததாகவும் இருக்க வேண்டும்.

அத்தகைய தீர்வுக்கு நீங்கள் என்ன பெயர் கொடுத்தாலும் – கூட்டு சமஷ்டி, சமஷ்டி, சுயாட்சி அல்லது ஒற்றையாட்சி என்ற என்ன பெயர் இருந்தாலும் – இந்த இரண்டும் முக்கியமானவை.

இதுதான் தமிழர் நிலைப்பாடு. இது இந்தியாவுக்குப் புரிந்தால் சரி.



## மலையக மக்களின் தொழில் உரிமைகளை வென்றெடுப்பதற்காக சங்கிலிப் போராட்டம்!

### வடிவேல் சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு

மலையக மக்களின் இருப்பை பாதுகாக்கவும், தொழில் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் சங்கிலிப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளேன். அனைத்து தோட்டங்களுக்கும் பயணம் மேற்கொள்வேன். வண்ணங்களோ, சின்னங்களோ இதில் இல்லை. எனவே, எண்ணங்களுக்காக அனைவரும் பேராதரவு வழங்க வேண்டும் – என்று இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

வடிவேல் சுரேஷ் தலைமையில் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தினர், தோட்டப்பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்டு, நாட்டு நிலைவரம் பற்றியும், தொழில்சார் விடயங்கள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஓர் அங்கமாக நுவரெலியா – நானுஓயா தோட்டப்பகுதிகளில் வெள்ளிக்கிழமை தெளிவூட்டல் நடவடிக்கை இடம்பெற்றது. இந்நிகழ்வின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே வடிவேல் சுரேஷ் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

மலையக மக்களுக்கு எதிராக அரசால் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அடக்குமுறைகள், மிகைவரி சட்டமூலத்தின் ஊடாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றில் கைவைப்பதற்கு அரசு மேற்கொள்ளும் முயற்சி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பெருந்தோட்ட மக்களுக்குத் தெளிவுப்படுத்தி, விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றோம்.

எமது மக்களின் இருப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், தொழில்சார் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் அனைத்துத் தோட்டங்களுக்கும் பயணம் மேற்கொள்ள உள்ளேன். எமக்கு வண்ணங்களோ, சின்னங்களோ முக்கியமில்லை. மக்களின் எண்ணங்கள்தான் முக்கியம். எனவே, கட்சிபேதமின்றி அனைவரும் இதற்கு ஆதரவு வழங்க வேண்டும். எமது மக்களுக்காக நாடாளுமன்றத்திலும், அதற்கு வெளியிலும் அனைத்து வழிகளிலும் போராடுவேன்.

மிகைவரி சட்டமூலத்தின் ஊடாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிலிருந்து 25 வீதம் அறவிடும் யோசனை எழுத்துமூலம் முன்வைக்கப்பட்டது. தற்போது அறவிடப்படாது என்ற உறுதிமொழி வாய்மூலம் வழங்கப்படுகின்றது. யோசனையை எழுத்துமூலம் வைத்துவிட்டு, உறுதிமொழியை வாய்மூலம் வழங்குவதை ஏற்கமுடியாது. அதுவும் எழுத்து வடிவில் வேண்டும். இந்த அரசை நம்புவதற்கு நாங்கள் முட்டாள்கள் அல்லர்.

இந்த நாட்டில் மாற்றமொன்று அவசியம். அந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே இருக்கின்றது. எனவே, முடியுமானால் தேர்தலொன்றை நடத்துமாறு அரசுக்கு சவால் விடுக்கின்றோம். அது எந்த தேர்தலாக இருந்தாலும் பரவாயில்லை, நடத்தினால் மக்கள் சக்தி எந்தப் பக்கம் என்பது தெரியவரும். அதேவேளை, மலையகத்தில் ஒரு பகுதியினருக்கு மட்டும் கோதுமை மா நிவாரணம் வழங்கும் நடைமுறை ஏற்புடையதல்ல. அனைத்துத் தரப்பினருக்கும் அது வழங்கப்பட வேண்டும். ஏனையோருக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கி விட்டு, மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு வெறும் 40 ரூபா வழங்கப்படுகின்றது. இதுவும் ஏற்புடைய நடவடிக்கை அல்ல. – என்றார்.

## நாட்டின் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்த ராஜபக்ஷக்கள் அரசால் முடியாமல்போயுள்ளது

### எதிர்க்கட்சி சாடல்



தற்போதைய அரசாங்கத்தால் நாட்டின் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாமல் போயுள்ளதாக எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

பட்டப்பகலில் கூட வீடுகளுக்கு வந்து ஆயுதங்களைக் காட்டி மிரட்டும் நிலை நாட்டில் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் பாதாள உலகக் குழுவினர் மீண்டும் தலைதூக்கியுள்ளனர் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்துள்ளார்.

தேசிய பெருமை அதல பாதாளத்தில் விழுந்துள்ள நிலையில் சர்வதேச நாடுகளிடம் கெஞ்ச வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். ராஜபக்ஷ குடும்பத்தினரின் ஆட்சி காரணமாக நாட்டில் விவசாயிகள் நிவாரணமாகப் பெற்ற உரத்தை இழந்துள்ளனர் எனவும், தற்போதைய அறுவடை பெருமளவு குறைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நாடு அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடப்பதாகவும், தேயிலை உற்பத்தி கூட வீழ்ச்சியடைந்து ஊழல் நிறைந்த ஆட்சி முறை உருவாகியுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு




# சரக்கு கப்பலில் தீ விபத்து 4,000 சொகுசு கார்கள் தீக்கிரை!

மிகப்பெரும் சரக்குக் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தில், ஏறக்குறைய 4,000 சொகுசு கார்கள் தீக்கிரையாகி யுள்ளன. போர்த்துக்கலின் அசோர்ஸ் தீவுகளின் கடற்கரைக்கு அருகே அட்லாண்டிக் பெருங்கடலில், இந்த தீவிபத்து ஏற்பட்டது.

பனாமா கொடியிடப்பட்ட பெலிசிட்டி ஏஸ் கப்பல், ஜேர்மனியில்இருந்துஅமெரிக்காவிற்குவோக்ஸ்வாகன குழுமத்தின் வாகனங்களை ஏற்றிச் சென்ற இந்தக் கப்பலில் போர்ச், அவுடி மற்றும் லம்போகினி உள்ளிட்ட சொகுசு கார்கள் இருந்தன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை மாலை இந்தக் கப்பலில் தீப்பிடித்ததாகவும், இதனையறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த போர்த்துகலின் கடற்படை மற்றும் விமானப்படை, கப்பலில் இருந்த 22 பணியாளர்களை பத்திரமாக மீட்டனர்.

சுமார் 3 கால்பந்து விளையாட்டு மைதானம் அளவு பெரியதான இந்தக் கப்பலில், மொத்தமாக 3965 சொகுசுகார்கள்இருந்தனஎனஉறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

போர்ச் செய்தித் தொடர்பாளர் கிட்டத்தட்ட 1,100 போர்ச் வாகனங்கள் கப்பலில் இருந்தமையை உறுதிப் படுத்தினார். அவுடி தனது சில கார்கள் கப்பலில் இருந்தமையைக் கூறியது. ஆனால் அவை எத்தனை என்பதைக் குறிப்பிடவில்லை. இதில், 100க்கும் மேற்பட்ட கார்கள் அமெரிக்காவின் டெக்சாஸில் உள்ள துறைமுகத்தில் இறக்குமதி செய்ய இருந்தன. நேற்று இரவு நிலைவரப்படி கப்பலின் தீயை முழுமையாக அணைத்து விட்டு கப்பலை இழுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்துள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. நிலைமையை தொடர்ந்து கண்காணித்து வருகிறோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல், 2019ஆம் ஆண்டில் கிராண்டே அமெரிக்கா கப்பல் தீப்பிடித்தபோது மார் 2,000க்கும் மேற்பட்ட சொகுசு கார்கள் தீயில் எரிந்து மூழ்கியமை குறிப்பிடத்தக்கது.

## ரஷ்யா பனிப்போருக்கு திரும்புகிறது எச்சரிக்கை விடுக்கும் ஜேர்மனி



பனிப்போர் கால இராஜதந்திரத்தால் சமாதானத்தை ரஷ்யா ஆபத்தில்கொண்டுசெல்வதாகஜேர்மனி வெளியுறவு அமைச்சர் அன்னலெனா பேர்பாக் குற்றம் சாட்டியுள்ளார். உக்ரைன்நெருக்கடியை தணிப்பதற்கு விரிவான நடவடிக்கையை எடுக்குமாறு ரஷ்யா வலியுறுத்தியுள்ளது.

உக்ரைனுடனான அதன் எல்லைக்கு அருகிலும், ரஷ்ய கூட்டாளியான பெலாரஸ் உடன் உக்ரேனை மூன்று பக்கங்களிலும் சுற்றி வளைத்துள்ள ரஷ்யா இராணுவத்தையும் இராணுவ தளவாடங்களையும் பாரியளவில் கட்டியெழுப்புவது குறித்து கவலை வெளியிட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை முதல்மூன்றுநாள்களுக்கு உலகத் தலைவர்கள் சந்திக்கும் வருடாந்திர மியூனிக் பாதுகாப்பு மாநாட்டிற்கு முன்னதாக வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே ரஷ்யா ஐரோப்பிய அமைதி ஒழுங்கின் அடிப்படைக் கொள்கைகளுக்கு சவால் விடுகிறது என்று அவர் எச்சரித்தார்.

ரஷ்யா தனது சொந்த செல்வாக்கு மண்டலத்திற்குள் இருக்கும் நாடுகளில் மேற்கத்திய இராணுவ சக்தியை கட்டுப்படுத்த முற்படும் ஐரோப்பிய பாதுகாப்பு தொடர்பாக ரஷ்யா விடுத்துள்ள கோரிக்கைகளின் தொடர்ச்சியை அவரது கருத்துக்கள் குறிப்பிடுகின்றன.

உக்ரைன் நெருக்கடி தொடர்பில் இராஜதந்திரம் தொடர அவர் அழைப்பு விடுத்தார். போரை நோக்கிய பெரிய படிகளை விட அமைதிக்கான சிறிய படிகள் கூட சிறந்தவை என்று அவர் மேலும் கூறினார்.

பனிப்போரின்போது சோவியத் யூனியன் செய்ததுபோல், அதன் எல்லைகளுக்கு அருகில் உள்ள நாடு களின் வெளியுறவுக் கொள்கையில் செல்வாக்கு செலுத்த ரஷ்யாவிற்கு உரிமை உண்டு என்ற கருத்தை மேற்கு நாடுகள் நிராகரிக் கின்றன.

பனிப்போர் என்பது 20 ஆம் நூற்றாண்டின் போருக்குப் பிந்தைய காலகட்டம், மேற்கத்திய நாடுகளுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையிலான போட்டி இரண்டு உலகளாவிய வல்லரசுகளை அணு ஆயுதப் போரின் விளிம்பிற்குக் கொண்டு வந்தது.

உக்ரைன் மீது படையெடுப்பதற்கான நியாயத்தை ரஷ்யா முன்வைக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி எச்சரித்தமையை அடுத்து இக்கருத்தை ரஷ்யா வெளியிட்டுள்ளது. ஜோபைடன் இராணுவ நடவடிக்கை உடனடியாக தொடங்கலாம் என்று கூறினார், ஆனால் இராஜதந்திர தீர்வு இன்னும் சாத்தியம் என்று வலியுறுத்தினார்.

அமெரிக்காவின் கூற்றுக்கள் ஆதாரமற்றவை என்று ரஷ்யா கூறியது. அத்துடன் அமெரிக்கா பதட்டங்களைத் தூண்டுவதாக குற்றம் சாட்டியது ரஷ்யா. மொஸ்கோ இராணுவப் பயிற்சிகளை மேற்கொண்டு வருவதாகக் கூறுகிறது மேலும் சில துருப்புக்கள் சமீப நாள்களில் அவர்களின் நிரந்தரத் தளங்களுக்குத் திரும்பிச் செல்லப்பட்டுள்ளனர் எனக்கூறுகிறது. படைகள் திரும்பிச் சென்றதற்கான எந்த ஆதாரங்களையும் நாங்கள் காணவில்லை என மேற்கு நாடுகள் தெரிவித்துள்ளன.

## உக்ரேனில் ரஷ்ய மக்களுக்கு எதிராக மனிதவுரிமை மீறல்கள் நடக்கின்றன

### புடின் குற்றச்சாட்டு



கிரெம்ளினில் நேற்று செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், யுக்ரேனில் ரஷ்ய மொழி பேசும் மக்கள் மீது பாகுபாடு மற்றும் அவர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் நடைபெறுகின்றன என ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன் வைத்தார்.

மேலும், உக்ரேன் நெருக்கடி குறித்து மேற்கு நாடுகள் தலைவர்களுடன் விவாதிக்க தான் தயாராக இருக்கின்றேன் தெரிவித்தார். ஆனால், அந்நாட்டு தலைவர்கள் ரஷ்யாவின் பாதுகாப்பு குறித்த கவலைகளை புறக்கணிக்கிறேன் எனவும் அவர் குற்றம்சாட்டினார்.



## உலகிலேயே மாசுபட்ட நதியாக பாகிஸ்தானின் ராவி ஆறு அறிவிப்பு

பாகிஸ்தானில் ஓடும் ராவி ஆறுதான் உலகிலேயே அதிகம் மாசுபட்ட நதி என்பது ஆய்வில் தெரியவந்துள்ளது. இங்கிலாந்தில் உள்ள யோர்க் பல்கலைக்கழகம் உலகம் முழுவதும் உள்ள 258 நதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாதிரிகள் எடுத்து சோதனை செய்தது.

உலகளவில் ஆய்வு செய்யப்பட்ட இடங்களில் கால் பகுதிக்கும் மேலான இடங்களில் மேற்பரப்பு நீரில் உள்ள அசுத்தங்கள் சுற்றுச்சூழல் மற்றும் மனித ஆரோக்கியத்திற்கு அச்சுறுத்தலாக இருப்பதாக ஆய்வின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பாகிஸ்தானில் ஓடும் ராவி ஆற்றில் மாசின் அளவு லீற்றருக்கு 189 மைக்ரோகிராம் அளவிற்கு இருப்பதாக யார்க் பல்கலைக்கழக ஆய்வில் தெரியவந்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அகமதாபாத் தொடர் குண்டுவெடிப்பு வழக்கு; 38 பேருக்குத் தூக்குத்தண்டனை வழங்கப்பட்டது




கடந்த 2008 ஆம் ஆண்டு ஜூலை 26 ஆம் திகதி குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் பல்வேறு இடங்களில் ஒரு மணி நேரத்தில் 21 குண்டுகள் வெடித்தன. இந்தத் தொடர் குண்டுவெடிப்பில் 51 பேர் பலியானார்கள். 200 க்கும் மேற்பட்டோர் காயமடைந் தனர்.

குஜராத்தில் கடந்த 2002 ஆம் ஆண்டு நடந்த ரயில் எரிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து நடைபெற்ற கலவரத்தில் நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் கொல் லப்பட்டதற்குப் பழிவாங்கும் விதமாக இந்திய முஜாஹிதீன் அமைப்பினர் இந்தக் குண்டுவெடிப்பு தாக்குதல்களை நிகழ்த்தி னர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்தத்தொடர் குண்டு வெடிப்புச் சம்ப வங்கள் தொடர்பாக மொத்தம் 35 வழக் குகள் பதிவு செய்யப்பட்டன. இந்திய முஜா ஹிதீன் அமைப்புடன் தொடர்புடைய 82 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். 4 பேருக்கு எதிராக இதுவரை வழக்கு விசாரணை ஆரம்பமாகவில்லை. அவர் களைத் தவிர 77 பேருக்கு எதிராக அக மதாபாத் சிறப்பு நீதிமன்றில் விசாரணை நடைபெற்று வந்தது.

இந்த வழக்கில் 49 பேரைக் குற்றவா ளிகளாக அறிவித்து நீதிபதி ஏ.ஆர்.பட்டேல் தீர்ப்பு வழங்கியிருந்தார். 28 பேர் நிரபராதி களாக அறிவிக்கப்பட்டுவிடுவிக்கப்பட்டனர். இந்த நிலையில், இந்தத் தீர்ப்புத் தொடர் பான தண்டனை விவரங்கள் நேற்று அகமதாபாத் சிறப்பு நீதிமன்றத்தினால் அறிவிக்கப்பட்டன. அந்த அறிவித்தலில் 49 குற்றவாளிகளில் 38 பேருக்குத் தூக் குத் தண்டனையும், 11 பேருக்கு ஆயுள் தண்டனையும் விதித்து அகமதாபாத் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ரஷ்யா–உக்ரைன் பேச்சு நடத்த வேண்டும் ஐ.நா.சபையில் இந்தியப் பிரதிநிதி வலியுறுத்தல்



ரஷ்யா-உக்ரைன்நாடுகளுக்கு இடையே போர்ப் பதற்றம் நிலவி வருகிறது. இதில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, இங்கி லாந்து மற்றும் நேட்டோ அமைப் புகள் உள்ளன.

இரு நாடுகளுக்குமிடையே போர்ப் பதற்றத்தைத் தணிக்க பிரான்ஸ் பேச்சுவார்த்தை நடத்தி யது. ஆனால், அதில் சுமூகமான முடிவு எட்டப்படவில்லை. ரஷ்யா வும் உக்ரைனும் பேச்சு நடத்த வேண்டும் என்று ஐ.நா. சபையும் வலியுறுத்தியுள்ளது.

இந்த நிலையில் நியூயோர்க்கில் நடைபெற்ற ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் ஐ.நா வுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியான டி.எஸ். திருமூர்த்தி உரையாற்றியபோது, ரஷ்யா - உக்ரைன் நாடுகளுக்கு இடையே உடனடியாக பதற்றத்தைதணிக்கஒருதீர்வைக்கண்டுபிடிப்பதில் இந்தியா ஆர்வமாக உள்ளது. அமைதியான மற் றும் ஆக்கபூர்வமான இராஜதந்திர ரீதியிலான பேச்சே இப்போது தேவை. இந்தியா அனைத்துத் தரப்பினருடனும் தொடர்பில் உள்ளது. பேச்சு மூலம் மட்டுமே பிரச் சினைக்குத் தீர்வு காண முடியும் என்பது எங்களின் கருத்து, என்று தெரி வித்துள்ளார்.

அனைத்து நாடுகளினதும் சட்டபூர்வ பாதுகாப்பு நலன்களைக் கருத்தில் கொண்டு பிராந்தியத்தி லும் அதற்கு அப்பாலும் நீண்ட கால அமைதி மற் றும் ஸ்திரத்தன்மையை பாதுகாப்பதை நோக்க மாக கொண்டு பதற்றத்தை உடனே தணிக்கக் கூடிய ஒரு தீர்வைக் கண்டுபிடிக்க வேண்டும் என வும், ரஷ்யா - உக்ரைன் நாடுகள் பேச்சு நடத்த வேண்டும். உக்ரைனில் இந்தியாவைச் சேர்ந்த மாணவர்கள் பல பகுதிகளிலும் கல்வி பயின்று வருகின்றனர். அவர்களின் பாதுகாப்பும் இந்தி யாவுக்கு முக்கியம் எனவும், போர்ப் பதற்றத்தைத் தணிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு இந்தி யா ஆதரவு அளிக்கும், என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.



## தமிழகம் முழுவதும் தாமரை மலருவது உறுதி வாக்களிப்புக்கு முன் அண்ணாமலை பேட்டி

தமிழகத்தின் நகர்ப்புற உள் ளாட்சித் தேர்தலுக்கான வாக் களிப்பு இன்று நடைபெற்றது. வாக்களிப்புக்கு முன்னதாக ஊடகவியலாளர்களைச் சந் தித்த பா.ஜ.க. தமிழக மாநிலத் தலைவர் அண்ணாமலை, தேர்தல் கள நிலைவரம் பற்றி தனது கருத்துக்களைப பகிர்ந்து கொண்டார்.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் மிகப்பெரிய எழுச்சி ஏற்பட்டுள்ளது. பா.ஜனதா வேட் பாளர்கள் மீது எந்தவிதமான புகாரும் கிடையாது. அவர்கள் மக்களைக் கவர்ந்துள்ளார்கள். சென்னை மாநகராட்சி, அனைத்துநகராட்சி,பேரூராட்சி களிலும் தாமரை மலர்ந்தே தீரும்.

ஆளுங்கட்சியினரின் அராஜகங்கள் அனைத்துப் பகுதியிலும் நடக்கின்றன. தேர்தல் ஆணையம் பாரா முகமாகவே இருக்கிறது. எதிர் பார்த்த அளவு அவர்கள் வேலை செய்யவில்லை. தேர்தலை முறையாக நடத்துவார்கள் என்று தேர்தல் ஆணையத்தின் மீது முழு நம்பிக்கை வைத் துள்ளோம், என்று அவர் தெரி வித்துள்ளார்.



## தமிழக முதல்வரின் சுயசரிதை நூல் வெளியீட்டு விழா பல தேசியக் கட்சித் தலைவர்களும் கலந்துகொள்வர்

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் ‘உங்களில் ஒருவன் என்ற சுயசரிதை நூலின் வெளியீட்டு விழாவில் பங்கேற்க காங்கிரஸ் எம்.பி.யான ராகுல் காந்தி தமிழகத்துக்கு வரவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

பெப்ரவரி 28 ஆம் திகதி சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மை யத்தில் உங்களில் ஒருவன் நூல் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது. இந்த விழாவில் காங்கிரஸ் எம்.பி. ராகுல்காந்தியோடு, சமூக நீதிக் கூட்டமைப்பில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்ட திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளுக்கும் இந்த விழாவில் பங்கேற்க அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதாகவும், தேசிய அளவிலான தலைவர்களும் இந்த நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்கவுள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புத்தக விழாவில் பங்கேற்கும் தலைவர்களுடன் தேசிய அளவிலான ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான ஆலோ சனைக்கூட்டம் ஒன்றும் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## விசா விதிகளை மீறி தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட ருமேனியா நாட்டவரிடம் அதிகாரிகள் விசாரணை



விசா விதிமுறையை மீறி தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட னர் என ருமேனியா நாட்டைச் சேர்ந்தவரிடம் இந்தியக் குடியு ரிமை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ருமேனிய நாட்டைச் சேர்ந்த நிகொய்டா தொழில் நிமித்தமாக வர்த்தக விசாவில் கோவைக்கு வந்துள்ளார். பேருந்தில் பய ணிக்கும்போது பெண்களுக்கு கட்டணமில்லா பேருந்துப் பயணம் நடைமுறையில் உள்ளது என்பதை அறிந்து நிகொய்டா ஆச்சரியமடைந்தார். அதனையடுத்து, தி.மு.க.வுக்கு ஆதரவாக தேர்தல் களத்தில் பிரசாரத்தில் அவர் தன்னையும் இணைத்துக் கொண்டிருந்தார்.

இவர் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டது தொடர்பானகாணொலிசமூகவலைத்தளங்களில் பகிரப்பட்டு சர்ச்சையையும் ஏற்படுத்தியிருந்தது. தமிழக அரசின் இந்தத் திட்டத்தால் ஈர்க்கப்பட்டு, தி.மு.க.விற்கு ஆதரவாக நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டேன் என நிகொய்டா ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

விசா விதிமுறையை மீறி நிகொய்டா செயல் பட்டார் எனவும் அதற்குரிய விளக்கத்தை அளிக் கும் படியும் இந்தியக் குடியுரிமை அதிகாரிகள் அவ ருக்கு கடிதம் அனுப்பியிருந்தனர். அதன்படி சென்னை நுங்கம்பாக்கம் சாஸ்திரி பவனில் உள்ள குடியுரிமை அலுவலகத்தில் விசார ணைக் காக நிகொய்டா ஆஜராகியிருந்தார்.

விசா விதிமுறையை மீறி அரசியல் நடவடிக் கையில் ஈடுபட்டமை தொடர்பாக இந்தியக் குடியு ரிமை அதிகாரிகள் அவரிடம் விசாரணை நடத்தி யுள்ளனர்.

இந்த விசாரணையின் அடிப்படையில் அடுத்தக்கட்டமாக ருமேனியா நாட்டைச் சேர்ந்த நிகொய்டாவின் விசாவை ரத்து செய்து ருமே னியாவிற்கு திருப்பி அனுப்ப வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ‘கடந்தகால கசப்பான நினைவுகளை மறந்து சமாதானத்திற்கான புதுயுகம் படைப்போம்!’

## மட்டக்களப்பில் இடம்பெற்ற ஒன்றுகூடல்!!



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

‘கடந்தகால கசப்பான நினைவுகளை மறந்து சமாதானத்திற்கான ஒரு புதுயுகம் படைப்போம்’ என்ற உள ஆற்றுப்படுத்தலுக்கான ஒருநாள் ஒன்றுகூடல் நேற்று முன்தினம் மட்டக்களப்பு வண்ணாத்திப்பூச்சி சமாதான பூங்கா வளாகத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் எஸ்.மைக்கல் ஒருங்கிணைப்பில், நிறுவன இயக்குநர் அருட்பணி ஏ.ஜேசுதாசன் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்டத்தின் கிராம மட்ட பல்சமய ஒன்றிய சமாதானக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இனங்களுக்கிடையில் நல்லிணக்கச் சமூகச் செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் மட்டக்களப்பு மாவட்ட கரித்தாஸ் எகெட் நிறுவனம் தற்போதைய சூழ்நிலையில் நல்லிணக்க செயல்பாடுகளுடன், ‘கடந்தகால கசப்பான நினைவுகளை மறந்து, சமாதானத்திற்கான ஒரு புதுயுகம் படைப்போம்’ எனும் உள ஆற்றுப்படுத்தலுக்கான ஒருநாள் ஒன்றுகூடல் நிகழ்வை நடத்தியது. இதில் வளவாளர்களாக மட்டக்களப்பு மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் அருட்பணி ஜொறோம் டிலீமா மற்றும் சமாதான நல்லிணக்க நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் எம்.றொபின்சன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# அமைச்சின் செயலாளராகிறார் திருகோணமலை அரச அதிபர்

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றிய சமன் தர்ஷன பாண்டிகோறாள அமைச்சு ஒன்றின் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். அதன்படி கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகாய், கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறுபோக பயிர்ச்செய்கை அபிவிருத்தி, அதனோடு இணைந்த கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் புதிய செயலாளாராக சமன் தர்ஷன பாண்டிகோறாள நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷவிடமிருந்து தமக்கான நியமனத்தை அவர் பெற்றுக்கொண்டார்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை இவர் தம் கடமைகளை உத்தியோகபூர்வமாக இராஜாங்க அமைச்சில் பொறுப்பேற்கவுள்ளார்.

கடந்த 2020.10.26 ஆம் திகதி திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக கடமையேற்ற இவர் குறுகிய காலத்தில் மாவட்ட மக்களின் பல்வேறு தேவைகளை விசேட கவனம் செலுத்திச் செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மலையக மக்கள் வாழ்வை சித்திரிக்கும் தேயிலை சாயம் ஓவியக் கண்காட்சி!

## மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில்







(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மலையக மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை வண்ணங்களாக சித்திரிக்கும் ஓவியக் கண்காட்சியொன்று மட்டக்களப்பில் இடம்பெற்றுவருகின்றது.

மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் இந்த ஓவியக் கண்காட்சியானது நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றைய தினம் இரண்டாவது நாளாகவும் இடம்பெற்றது.

தேயிலை சாயம் எனும் தொனிப்பொருளில் இடம்பெற்று வரும் இந்த ஓவியக் கண்காட்சியில் மலையகத்தைச் சேர்ந்த 40 கலைஞர்களால் எடுக்கப்பட்ட 45 ஆயிரம் படங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த படங்கள் ஓவியங்களாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், ஊவா சக்தி நிலையம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணை ஏற்பாட்டில் இதன் ஒருங்கிணைப்பாளரான லகிறு கித்துலகம தலைமையில் இந்த ஓவியக் கண்காட்சி இடம்பெற்றுவருகின்றது. மலையக தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கை தரத்தைச் சித்திரிக்கும் இந்த கண்காட்சியின் ஊடாக மலையக மக்களின் வாழ்க்கைத்தரம், அவர்களது உணவுப் பழக்கவழக்கங்கள், கலாசாரம் மற்றும் ஏனைய விடயங்களை ஏனைய சமூகத்தினர் மத்தியில் கொண்டுசேர்த்து அவை குறித்துத் தெளிவுபடுத்துவதையும் நோக்காகக் கொண்டு இந்த ஓவியக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மறித்த பொலிஸாருக்கு ஓட்டம் காட்டிய டிபெண்டர் கலைத்துப் பிடிக்கப்பட்டது!

## உள்ளிருந்தோர் தப்பி ஓட்டம்; கல்முனையில் சம்பவம்

(எஸ்.அஷ்ரப்கான்)

காரைதீவு பிரதேசத்தில் இருந்து கல்முனை நோக்கி வந்த டிபெண்டர் வாகனம் ஒன்றை போக்குவரத்துப் பொலிஸார் வழிமறித்தபோது பொலிஸாரின் சமிக்ஞையை மீறி, அவர்களுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு, அது தப்பிச் செல்ல முயன்றது. அதனைப் பொலிஸார் கலைத்து மடக்கினர். ஆனால் வாகனத்தில் இருந்தோர் அதைக் கைவிட்டுத் தப்பி ஓட்டம் பிடித்தனர்.

நேற்று முன்தினம் வழிமறிக்கப்பட்ட அந்த டிபெண்டர் நிற்காமல் தொடர்ந்தும் கல்முனையை நோக்கி அதிவேகமாகபயணித்ததன்காரணமாகபோக்குவரத்துப் பொலிஸார் அதனைப் பின்தொடர்ந்து கலைத்தனர். போக்குவரத்துப் பொலிஸாரின் வாகனத்தையும் தாக்கிவிட்டு அந்த டிபெண்டர் தொடர்ந்தும் கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் வீதியின் ஊடாக அதி வேகமாக பயணம் மேற்கொண்டது. கடற்கரை வீதியில் இடைநடுவில் டிபெண்டரை விட்டு அதன் சாரதியும் ஏனையவர்களும் தப்பிச்சென்றனர். கல்முனை பொலிஸ் தலைமைப் பீட பொறுப்பதிகாரி எம்.ரம்சீம் பக்கிர் தலைமையிலான குழுவினர், அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து, டிபெண்டரைக் கைப்பற்றி பாரம் தூக்கி இயந்திரத்தின் உதவியுடன் கல்முனை பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர். இந்த வாகனத்தினுள் போதைப்பொருள்கள் இருக்கின்றன எனச் சந்தேகிக்கப்படுகின்ற நிலையில், தப்பிச் சென்றவர்களைத் தேடும் நடவடிக்கை மற்றும் மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# தென்னாபிரிக்காவுடனான முதலாவது டெஸ்ட் நியூசிலாந்து அணிக்கு இன்னிங்ஸ் வெற்றி




நியூசிலாந்து- தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டியில் நியூசிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 276 ஓட்டங்களால் அபாரமான வெற்றியைப் பெற்றுள்ளது.

இந்தப் போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பிலீடுபடத் தீர்மானித்தது. அந்த அணியின் மட் ஹென்றி 7 விக்கெட்டுக்களை வீழ்த்தி தென்னாபிரிக்க அணியைத் திணறடித்தார்.

தனது முதலாவது இன்னிங்ஸில் வெறும் 95 ஓட்டங்களிலேயே தென்னாபிரிக்கா சுருண்டது. அதிகபட்சமாக சுபைர் ஹம்சா 25 ஓட்டங்களை எடுத்தார். 15 ஓவர்கள் பந்துவீசிய மட் ஹென்றி, 23 ஓட்டங்களை மட்டும் விட்டுக்கொடுத்து 7 விக்கெட்டுக்களையும் சாய்த்திருந்தார்.

பின்னர் நியூசிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸை தொடங்கி விளையாடியபோது ஆரம்ப விக்கெட்டுக்கள் விரைவாக வீழ்த்தப்பட்டாலும் மத்திய மற்றும் பின்வரிசை வீரர்கள் கைகொடுக்க 482 என்ற மிகப்பெரிய ஓட்ட எண்ணிக்கையை எட்டியது. ஹென்றி நிக்கோல்ஸ் 105, டொம் ப்ளுன்டெல் 96 ஓட்டங்களை எடுக்க, இறுதித் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய மட் ஹென்றி, துடுப்பாட்டத்திலும் பிரகாசித்து ஆட்டமிழக்காது 58 ஓட்டங்களை எடுத்தார்.

தென்னாபிரிக்க அணியின் ஒலிவியர் 3 விக்கெட்டுக்களையும், ரபாடா, ஜான்சென், மார்க்ரம் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

அடுத்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி, 4 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்து மிகத்தடுமாற்றமாகவே ஆரம்பித்து, 111 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அதிகபட்சமாக பவுமா 41 ஓட்டங்களையும், வெரைய்ன் 30 ஓட்டங்களையும் எடுத்தனர்.

நியூசிலாந்து அணியின் டிம் சௌதி 5 விக்கெட்டுக்களையும், மட் ஹென்றி, நீல் வக்னர் இருவரும் தலா இரு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். போட்டியின் ஆட்ட நாயகனாக நியூசிலாந்து அணியின் மட் ஹென்றி தெரிவானார். இரு அணிகளுக்குமிடை யிலான இரண்டா வதும் தொடரின் இறுதியுமான டெஸ்ட் போட்டி வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

# இந்திய அணிக்கு இரண்டாவது ரி-20யிலும் வெற்றி மே.இ.தீவுகளுடனான தொடரையும் கைப்பற்றியது

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவது ரி-20 போட்டியில் இந்திய அணி 8 ஓட்டங்களால் வெற்றிபெற்று ஒரு போட்டி மீதமுள்ள நிலையிலேயே தொடரையும் கைப்பற்றியுள்ளது.

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி, முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இந்திய அணி, 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 186 ஓட்டங்களை பெற்றது. விராட் கோலியும் ரிஷப்பண்ட்டும் தலா 52 ஓட்டங்களையும் வெங்கடேஷ் ஐயர் 33 ஓட்டங்களையும் எடுத்தனர். மேற்கிந்திய தீவுகள் அணியின் ரோஸ்டன் சேஸ் 3 விக்கெட்டுக்களையும் கொட்ரேல் மற்றும் ரொமரியோ செப்பர்ட் இருவரும் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

அடுத்து, 187 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியால், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை மட்டுமே இழந்த நிலையிலும் 178 ஓட்டங்களையே பெற முடிந்தது. இந்திய அணி 8 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ரொவ்மன் பவல் ஆட்டமிழக்காது 68 ஓட்டங்களையும் நிக்கொலஸ் பூரன் 62 ஓட்டங்களையும் எடுத்தனர். இந்திய அணியின் புவனேஸ்வர் குமார், சஹல் மற்றும் ரவி பிஷ்னோய் மூவரும் தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக ரிஷப்பண்ட் தெரிவுசெய்யப்பட்டார். இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவதும் இறுதியுமான ரி-20 போட்டி நாளை கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறவுள்ளது.







# தொடரின் நான்காவது ரி-20 போட்டியிலும் இலங்கையை வென்றது ஆஸ்திரேலியா

இலங்கை அணிக்கெதிரான ஐந்து போட்டிகள் ரி-20 கிரிக்கெட் தொடரை ஏற்கனவே கைப்பற்றியிருக்கும் ஆஸ்திரேலிய அணி நான்காவது ரி-20 கிரிக்கெட் போட்டியிலும் 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

மெல்பேர்ன் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ள முடிவெடுத்து, இலங்கையைத் துடுப்பெடுத்தாட அழைத்தது. இலங்கை அணி, 20 ஓவர்களில் 139 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பத்தும் நிஸங்க 46 ஓட்டங்களையும் குசல் மெண்டிஸ் 27 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆஸ்ரேலிய அணியின் ஜய் ரிச்சட்சன் மற்றும் கேன் ரிச்சட்சன் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 140 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி, 18.1 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றிபெற்றது. மக்ஸ்வெல் ஆட்டமிழக்காது 48 ஓட்டங்களையும் ஜோஸ் இங்லிஸ் 40 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

இலங்கை அணியின் லஹிரு குமார 2 விக்கெட்டுகளையும் மகேஷ் தீக்ஷன், துஷ்மந்த சமீர ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இரு அணிகளுக்குமிடையிலான ஐந்தாவதும் இந்தத் தொடரின் இறுதியுமான ரி-20 போட்டி நாளை நடைபெறவிருக்கிறது.

## பெரும் நம்பிக்கையை .....-

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது பாக்கு நீரிணையின் இருபுறமும் உள்ள தமிழர்களினதும் மற்றும் பரந்துபட்ட இந்திய நலனுடனும் உள்ளார்ந்த முறையில் இணைக்கப்பட்டுமுள்ளது.

இலங்கையில் தமிழ்த் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எப்போதும் விவேகமான நடைமுறையையும் ஒருமித்த அணுகுமுறையையும் கடைப்பிடித்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகிய இரு அமைப்புக்களும் தமிழக அரசுடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தவும், இந்திய அரசுடனான ஈடுபாட்டை மேலும் வலுப்படுத்தவும் எதிர்பார்க்கின்றன – என்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்திய வம்சாவளி மலையக மக்களின் அரசியல் ஆவணம் 21 இல் இறுதிவடிவம்!



## மனோ எம்.பி. தெரிவிப்பு

தமிழ் முற்போக்கு கூட்டணியின் கோரிக்கையின் பேரில், கண்டி சமூக அபிவிருத்தி மன்றத்தின் சார்பில் அதன் தலைவர் பி. முத்துலிங்கம் மற்றும் சமூக செயற்பாட்டாளர் கௌதமன் பாலசந்திரன் ஆகியோரின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்திய வம்சாவளி மலையக மக்களின் அரசியல் ஆவண வரைவு, எதிர்வரும் 21 ஆம் திகதி கொழும்பில் கலந்துரையாடப்பட்டு இறுதி வடிவம் பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ் முற்போக்கு கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள், கூட்டணி கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் மலையக சிந்தனையாளர்கள் கலந்துகொள்வார்கள் எனத் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர் -

இறுதி வடிவம் பெறுகின்ற இந்த ஆவணம், இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட அனைத்து கட்சித் தலைவர்கள், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் உட்பட தமிழகக் கட்சித் தலைவர்கள், பிரித்தானியா, அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சர்வதேச நாட்டு அரசுகள், சர்வதேச நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு சேர்ப்பிக்கப்படும்.

அத்துடன் இந்த ஆவணம் தேசிய ரீதியான கலந்துரையாடல்களுக்காக நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பரந்து வாழும் இந்திய வம்சாவளி மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் சமூக அமைப்புகளுக்கு வழங்கப்படும்.

சிவில் சமூக அமைப்புகளுடன் நாம் நடத்த உத்தேசித்துள்ள கலந்துரையாடல்கள், இலங்கை, இந்தியா, பிரித்தானியா மற்றும் சர்வேதச அரசு நிறுவனங்களுடன் நாம் நடத்தும் பேச்சுகளுக்கு அடிப்படையாக அமையும் என நாம் நம்புகிறோம்.

புதிய அரசமைப்பு வரைவை தயாரித்து வரும் தனது உத்தேசத்தை இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. புதிய அரசமைப்பு வரைவு எழுதப்பட்டு வருவதையும் நாமறிவோம்.

இந்தப் பின்னணியில் இன்றைய சூழலில் எழுந்துள்ள புதிய நிலைமைகளைக் கருத்தில் கொண்டு மலையக மக்கள் தொடர்பாக விரிவுபடுத்தப்பட்ட நிலைப்பாட்டுக் கோரிக்கைகளை நமது நாட்டு அரசுக்கு அறிவித்து, பேச்சுகளில் ஈடுபட நாம் உத்தேசித்துள்ளோம்.

அதேவேளையில் இலங்கை அரசுக்கு இந்திய அரசு வழங்கி வரும் உதவிகள் மற்றும் அதன்மூலம் இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புதிய கருத்து பரிமாற்றங்களையும் நாம் அவதானித்து வருகிறோம்.

இந்தத்தொடர்பாடல்கள், பொருளாதார ஒத்துழைப்பு விவகாரங்களுடன் மாத்திரம் மட்டுப்படுவது முறையானதல்ல என நாம் நம்புகின்றோம். 1954 (நேரு-கொத்தாவலை), 1964 (சிறிமா-சாஸ்திரி),1974 (சிறிமா-இந்திரா), ஆகிய ஆண்டுகளில் இலங்கை- இந்திய அரசு தலைவர்கள் மத்தியில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களின்படியும், இந்தியப் பிரதமர்களுக்கும், இலங்கை ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜெயவர்த்தன, ஆர். பிரேமதாஸ, சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையில் நடத்தப்பட்ட பேச்சுகளின்படியும், இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்கள், குறிப்பாக இந்திய வம்சாவளி மலையக மக்கள் தொடர்பில் இலங்கை அரசுடன் இந்திய அரசுக்கும் இருக்கின்ற கடப்பாடுகள் நல்லெண்ண அடிப்படையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுவே தமிழ் முற்போக்கு கூட்டணியின் எதிர்பார்ப்பாகும்.

இதுபற்றி தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசுக்கும், தமிழக அரசியல் கட்சிகளுக்கும் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பையும் தமிழ் முற்போக்கு கூட்டணி நிறைவேற்றும்.

அதேவேளை, மலைநாட்டு தோட்டத் தொழிலாளர்களை இலங்கை தீவுக்கு அழைத்து வந்து பெருந்தோட்ட பொருளாதாரத்தை கட்டி எழுப்பி, பயன்பெற்றதன் அடிப்படையில் பிரித்தானிய ராணியின் அரசாங்கத்துக்கும், மலையக மக்கள் தொடர்பில் இருக்கின்ற பெரும் கடப்பாட்டையும் எடுத்து கூறி, பேச்சுகளில் ஈடுபடவும், ஐ.நா. உட்பட சர்வதேச சமூகத்தை அணுகவும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் முடிவு செய்துள்ளது.

நாம் முன்வைக்க உள்ள, இந்திய வம்சாவளி மலையக மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிக்கும் இந்த அரசியல் ஆவணம், மேற்கண்ட அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டு நட்புறவு மற்றும் நல்லெண்ண நடவடிக்கைகளுக்கும் அடிப்படையாக அமையும் என நாம் நம்புகிறோம். இது தொடர்பில் நாடெங்கும் வாழும் இந்திய வம்சாவளி மலையக மக்களினதும், அனைத்து சகோதர மக்களினதும் ஒத்துழைப்புகளையும், ஆதரவையும் நாம் கோருகிறோம். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

# வலுசக்தி அதிகாரசபைக்கு ஜனாதிபதி கோட்டா விஜயம்

கொழும்பு 07, ஆனந்த குமாரசுவாமி மாவத்தையில் அமைந்துள்ள இலங்கை நிலைபெறுதகு வலுச்சக்தி அதிகார சபைக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று (வெள்ளிக்கிழமை) திடீர் விஜயத்தை மேற்கொண்டார்.

நீர், சூரிய சக்தி, காற்று போன்ற மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவலுக்களைக் கொண்டு மின்னுற்பத்தியை மேற்கொள்வதற்குள்ள இயலுமை தொடர்பில், இலங்கை நிலைபெறுதகு வலுச்சக்தி அதிகார சபையின் அதிகாரிகளை நேரடியாகச் சந் தித்துத் தகவல் தெரிவித்துக்கொள்ளும் நோக்கி லேயே, ஜனாதிபதி இந்தத் திடீர் விஜயத்தை மேற் கொண்டார்.

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்துக்கமைய, 2030ஆம் ஆண்டாகும் போது இந்த நாட்டின் மொத்த மின்னுற்பத்தியில் 70 சதவீதத்தை மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வலுக்களின் மூலம் பெற்றுக்கொள்வதே அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளது.

அதேபோன்று, நாட்டுக்குள் தற்போது ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடிக்கு, மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவலுப் பயன்பாட்டின் மூலம் குறுகிய காலத்துக்குள் தீர்வு காண்பதற்குள்ள இயலுமை தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

இதேவேளை, புதிதாக ஆரம்பிக்கக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவலுப் பயன்பாட்டிலான திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதங்கள் தொடர்பில் ஆராய்வதும், இந்த விஜயத்தின் நோக்கமாக அமைந்திருந்தது.




# எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பஸ் சேவைகளும் பாதிப்படைவு

## பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் வேதனை

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பஸ் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன இந்த விடயத்தைக் குறிப்பிட் டுள்ளார்.

சில பகுதிகளில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பஸ் உரிமையாளர்கள் வேறு பகுதிகளுக்கு சென்று எரிபொருளை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தனியார் பஸ் உரிமையாளர்கள் மேலும் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு தீர்வைக் கோரி எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகவும் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

# சர்வதேச நாணயநிதியத்தை நாடுமாறு ரணில் கூறுகின்றமையின் நோக்கமென்ன?

## காணி அமைச்சர் சந்திரசேன கேள்வி



அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் ஒரு பொறிமுறையாக சர்வதேச நாணய நிதியம் காணப்படுகிறதால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து நாணய நிதியத்தை நாடுமாறு வலியுறுத்துகிறார் என காணி விவகாரத் துறை அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

'கொவிட் தாக்கத்தின் பின்னரான காலப்பகுதியில் பொருளாதார ரீதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்கிறோம். நெருக்கடியான நிலைமையைச் சீர்செய்ய அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது. மாற்று வழிமுறைமை ஊடாகத் தற்போதைய நிலைமையைச் சமாளிக்க முடியும் என மத்திய வங்கியின் ஆளுநர் உத்தியோகபூர்வமாக அறிவுறுத்தியுள்ளார்.

தற்காலிக பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணச் சர்வதேச நாணய நிதியத்தை நாட வேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது. அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் ஒரு பொறிமுறையாக சர்வதேச நாணய நிதியம் காணப்படுகின்றமையால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து நாணய நிதியத்தை நாடுமாறு வலியுறுத்துகிறார்.

சர்வதேசநாணயநிதியத்தின்நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால் அது அரச ஊழியர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் அரச செயலொழுங்கிலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை பெரும்பாலான அமைச்சர்கள் அமைச்சரவையின் போது எடுத்துரைத்துள்ளார்கள். - இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ரயில் பயணச்சீட்டுக்களை ஒன்லைனில் வழங்க முடிவு

பயணிகளுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்கில் வெள்ளிக்கிழமை முதல் ஒன்லைனில் ரயில் பயணச் சீட்டுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை ரயில்வே சேவையின் பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

பயணிகள் இணையத்தில் பயணச்சீட்டை முன்பதிவு செய்து கொள்ள முடியும் எனவும் அல்லது கையடக்க தொலைபேசி செயலி ஊடாக ஆசனத்தை முன்பதிவு செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கான கையடக்கத் தொலைபேசி செயலி விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும், பயணிகளின் தேவைக்கு ஏற்ப எதிர்காலத்தில் இந்த வசதி கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.02.2022இல் வெளியிடப்பெற்றது.